# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.26/2024** **நாள் : 09.03.2024**

**ரூ.98.28 கோடி மதிப்பீட்டில் பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலம், பழைய மாமல்லபுரம் சாலையில் தரமணி லிங்க் சாலை முதல் நூக்கம்பாளையம் சாலை வரை உள்ள பகுதிகளுக்கு குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் ரூ.280.80 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், ஒக்கியம்-துரைப்பாக்கம் பகுதிகளுக்கு கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.**

<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 8.3.2024 அன்று சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.98.28 கோடி மதிப்பீட்டில் பெருங்குடி & சோழிங்கநல்லூர் மண்டலம், பழைய மாமல்லபுரம் சாலையில் தரமணி லிங்க் சாலை முதல் நூக்கம்பாளையம் சாலை வரை உள்ள பகுதிகளுக்கு குடிநீர் பிரதான குழாய் பதிக்கும் பணிகள் தொடங்கிவைக்கப்பட்டது. மேலும், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று ரூ.280.80 கோடி மதிப்பீட்டில் சோழிங்கநல்லூர் மண்டலம், ஒக்கியம்-துரைப்பாக்கம் பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், பழைய மாமல்லபுரம் சாலையில் தரமணி லிங்க் சாலை முதல் நூக்கம்பாளையம் சாலை வரை 35.41 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் ஒக்கியம்-துரைப்பாக்கம் பகுதிகளுக்கு 69.63 கி.மீ நீளத்திற்கு கழிவுநீர் குழாய் (ம) 11.09 கி.மீ நீளத்திற்கு விசைக்குழாய் பதிக்கும் பணிகள் உடனடியாக தொடங்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் குடிநீர் வழங்கல் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு 3,32,670 மக்களுக்கு நாளொன்றுக்கு 16.5 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

மேலும், ஒக்கியம் - துரைப்பாக்கம் விரிவான பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் ஒக்கியம் - துரைப்பாக்கம் பகுதிகளில் 2,819 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 6 கழிவுநீரிறைக்கும் நிலையங்கள், 3 கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 17.02 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சோழிங்கநல்லூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும். இதன்மூலம், 1,41,851 பொதுமக்கள் பயன் பெறுவர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள CHN_Metro_Water CMWSSB chennaimetrowater